FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை

(u/s 173 BNSS) u/s
~~(under Section 154 Cr.P.C)~~ u/s
(சார்பு) u/s 173 BNSS) u/s ~~(சட்டப்பிரிவு 154 இன் கீழ்)~~ u/s

C 8101995

1. District : Madurai PS: VAAC Year: 2025 FIR No.: 06/2025 Date: 02.05.2025
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: u/s 7(a) of PC Act 1988 as
   (ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018. Sections பிரிவுகள் (amended by PC (amendment) Act 2018.
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 09.04.2025 at 12.45 hrs. Date to :
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 22.04.2025 at 15.00 hrs.
   Time Period : Time from : 30.04.2025 at 14.55 hrs. Time to :
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை 01.05.2025 at 16.30 hrs.
   (b) Information Received at PS. Date : 02.05.2025 Time : 0800 hrs.
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 02.05.2025 Time : 0900 hrs.
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Typed complaint.
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: VAO office, Virudhanur, South Taluk
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Madurai District.
   Beat Number : (b) Address : 19 km, SouthEast.
   முறைக் காவல் எண் முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. G. Muruges wari (b) ~~Father's~~/ Husband's Name : Ganesan (late)
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 04.01.1987 (d) Nationality : Indian. (e) Passport No. : —
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : — Place of Issue : —
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Petty shop. (g) Address : 14-4-159, Rayal Garden, Sholavandhan, Vadipatti Taluk, Madurai District.
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) Tmt. Indira, Village Administrative officer, Virudhanur village, South Taluk, Madurai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached seperate sheets Pages 3 to 8

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

G. Manojkumar 02.05.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

2/5/2025
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 02.05.2025 09.55
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. KUMARAGURU,
Rank: நிலை ..... No. என் .....
Inspector of Police,
VVAC, Maburai.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 02.05.2025-ஆம் தேதி காலை 08.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகா, சோழவந்தான், ராயல் கார்டன், எண் 14-4-159 என்ற முகவரியில் வசிக்கும் (லேட்) கணேசன் மனைவி திருமதி. க.முருகேஸ்வரி என்பவர் நிலையத்தில் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு ஒன்றை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திருமதி.க.முருகேஸ்வரி, க/பெ.கணேசன், (லேட்), 14-4-159, ராயல் கார்டன், சோழவந்தான், வாடிப்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, மதுரை. அய்யா, நான் சோழவந்தானில் வாடகை வீட்டில் எனது மகன்கள் கார்த்திக் மற்றும் கண்ணன் ஆகியோருடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு விராதனூரை சேர்ந்த ராமராஜ் மகன் கணேசனுடன் 02.06.2004-ந் தேதி திருமணம் நடைபெற்றது. எனது கணவர் 29.09.2019ந் தேதி இறந்துவிட்டார். அதே ஆண்டில் எனது மாமனார் ராமராஜமும் இறந்துவிட்டார். நான் நான்கு வருடங்களாக சோழவந்தானில் மாலையில் தள்ளுவண்டியில் கடலை மற்றும் பயறு வகைகள் விற்பனை செய்து பிழைத்து வருகிறேன். எனது மாமனார் பெயரில் விராதனூரில் சொத்து இருக்கிறது. அந்த சொத்துக்களை விற்பதற்கோ, பங்கு வைப்பதற்கோ, எனது மகன் வேலைக்கு செல்வதற்கோ, வாரிசு சான்று தேவைப்படும் என்பதால் 01.04.2025-ந் தேதி வாரிசு சான்று கேட்டு எனது பெயரிலும், எனது கணவர், எனது மகன்கள் மற்றும் எனது மாமியார் வளர்மதி ஆகியோர்களின் ஆதார் கார்டு நகல்களையும், எனது கணவர் மற்றும் மாமனாரின் இறப்பு சான்றுகளின் நகல்களையும் இணைத்து விண்ணப்பித்தேன். பின்னர் 07.04.2025-ந் தேதி மாலை சுமார் 05.30 மணிக்கு விராதனூர் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.இந்திரா அவர்கள் அவரது கைப்பேசி எண் 9150131913 என்ற எண்ணிலிருந்து எனது கைப்பேசி எண் 9025861898 க்கு அழைத்து வாரிசு சான்று கேட்டு விண்ணப்பித்துள்ளீர்களா என்று கேட்டார். நான் அவரிடம் ஆமாம் என்று கூறினேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் என்ன காரணத்திற்காக வாரிசு சான்று கேட்டு

விண்ணப்பித்துள்ளீர்கள் என்று கேட்டார். நான் அவரிடம் எனது மாமனார் பெயரில் விராதனூரில் சொத்துக்கள் உள்ளது ஆகையால், அதை விற்பதற்கும், பங்கு வைப்பதற்கும் தேவைப்படுவதால் விண்ணப்பித்தேன் என்று கூறினேன். அவரை விராதனூர் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு நேரில் வந்து சந்திக்கும்படி கூறினார். நானும் 09.04.2025-ந் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு விராதனூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்றேன். கிராம நிர்வாக அலுவலர் திருமதி.இந்திரா அவர்கள் மதியம் சுமார் 12.45 மணிக்கு வந்தார். நான் அவரை சந்தித்த போது, அவர் என்னிடம் வாரிசு சான்று விண்ணப்பித்ததற்கான காரணத்தை மீண்டும் கேட்டார். நான் அவரிடம் மாமனார் பெயரில் உள்ள சொத்துக்கள் சம்மந்தமாக தேவைப்படுகிறது என கூறினேன். திருமதி.இந்திரா அவர்கள் என்னிடம் இத்தனை வருடம் ஏன் வாரிசு சான்று வாங்கவில்லை என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் எனக்கு விவரம் தெரியாது மேடம் என்று கூறினேன். அதற்கு அவர் வாரிசு சான்று 6 மாதத்திற்குள் வாங்க வேண்டும். எத்தனை வருடம் ஆகிவிட்டது என கேட்டார். நான் அவரிடம் 6 வருடம் ஆகிறது மேடம் என்று கூறினேன். அவர் என்னிடம் வருடத்திற்கு ரூ.3,000/- வீதம் மொத்தம் ரூ.18,000/- கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் அவரிடம் அந்த பணம் அரசாங்கத்திற்கு கட்டவேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு திருமதி.இந்திரா அவர்கள் அவரது அலுவலக செலவிற்காக கொடுக்க வேண்டும் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் எனக்கு வசதி இல்லை, நான் தள்ளுவண்டி வியாபாரம் செய்து வருகிறேன் அதனால் அவ்வளவு பணம் என்னால் கொடுக்க முடியாது என்று கூறினேன். அதற்கு அவர் நீங்கள் பணத்தை ரெடி பண்ணிவிட்டு எனக்கு போன் பண்ணுங்கள் என்று கூறி அனுப்பிவிட்டார். பின்னர் 17.04.2025-ந் தேதி மதியம் சுமார் 12.15 மணிக்கு நான் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.இந்திரா அவர்களுக்கு போன் செய்த போது விஏஓ என்னிடம் அவரது விசாரணையில் நீங்கள் வேறு திருமணம் செய்து விட்டதாக கூறுகிறார்களே என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் வேறு திருமணம் செய்யவில்லை மேடம். எனது Voter ID, Ration Card, Aadhaar Card, வங்கி கணக்கு புத்தகம் ஆகிய அனைத்துமே எனது கணவராக கணேசன் அவர்கள் பெயர் தான் உள்ளது என்று கூறினேன். அதற்கு விஏஓ திருமதி.இந்திரா என்னை விராதனூர் விஏஓ

அலுவலகத்திற்கு நேரில் வர சொன்னார். பின்னர் நான் மதியம் சுமார் 12.40 மணிக்கு விஏஓ திருமதி.இந்திரா அவர்களிடம் மீண்டும் போனில் பேசி, எத்தனை மணிக்கு வரவேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் எப்போது வந்தாலும் மதியம் 12.30 மணிக்கு மேல் வந்து பாருங்கள் என கூறினார். நான் தள்ளுவண்டி வியாபாரம் செய்வதால் உடனே செல்ல முடியவில்லை. 22.04.2025-ந் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு நானும் எனது கொழுந்தன் திரு.வடிவேல் அவரது மனைவி புவனேஸ்வரி ஆகியோருடன் விராதனூர் விஏஓ அலுவலகத்திற்கு சென்று திருமதி.இந்திரா அவர்களை நேரில் சந்தித்தோம். அப்போது விஏஓ என்னிடம் உங்களுக்கு திருமணம் ஆகவில்லை என்பதற்காக ஒரு கடிதத்தை நான் எழுதி தருகிறேன். அதில் இரண்டு சாட்சிகளும் நீங்களும் கையெழுத்து போடவேண்டும் என்று கூறி சாப்பிட்டுவிட்டு வர சொன்னார். பின்னர் மதியம் சுமார் 03.00 மணிக்கு நான், திருமதி. இந்திரா அவர்களை சந்தித்த போது அவர் எழுதி வைத்திருந்த கடிதத்தில் நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். அதில் நான் மறுமணம் செய்யவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. சாட்சியாக என்னுடன் வந்த வடிவேல் மற்றும் புவனேஸ்வரி ஆகியோர் கையொப்பம் செய்தார்கள். பின்னர் விஏஓ திருமதி.இந்திரா அவர்கள் என்னிடம் நான் கேட்ட பணம் ரூ.18,000/- ரெடி பண்ணிவிட்டீர்களா என்று கேட்டார். நான் அவரிடம் மேடம் நான் தள்ளுவண்டி தொழில் தான் செய்து வருகிறேன். சிரமமாக உள்ளது பணம் கொடுக்காமல் வாரிசு சான்று கிடைக்குமா என்று கேட்டேன். அதற்கு அவர் பணம் கொடுக்காமல் ஒரு வேலையும் நடக்காது. நான் கேட்ட பணம் ரூ.18,000/-யை தயார் செய்து கொண்டு வந்து கொடுக்கும்படி கூறி விட்டு நீங்கள் புதிதாக வாரிசு சான்று கேட்டு விண்ணப்பிக்க வேண்டும். ஏற்கனவே விண்ணப்பித்த மனுவை ரிஜெக்ட் செய்து விட்டோம் என்று கூறினார். நீங்கள் மீண்டும் விண்ணப்பித்து விட்டு இரண்டு நாட்கள் கழித்து என்னை நேரில் வந்து பாருங்கள் என்று கூறினார். அதன்படி நான் 23.04.2025-ந் தேதி வாரிசு சான்று கேட்டு ஆன்லைனில் விண்ணப்பித்து விட்டு 28.04.2025-ந் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு விராதனூர் விஏஓ அலுவலகத்திற்கு சென்று பார்த்தபோது கிராமநிர்வாக அலுவலர் இரண்டு நாட்கள் விடுப்பில் சென்று விட்டார் என்றும் புதன்கிழமை வந்து விடுவார் என்றும் கூறினார்கள். எனவே நான் 30.04.2025-ந் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு

விஏஓ திருமதி.இந்திரா அவர்களை சந்திக்க விராதனூர் விஏஓ அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு விஏஓ மதியம் சுமார் 01.30 மணி வரை வராததால் தலையாரி அவர்களிடம் கேட்டேன். உடனே தலையாரி அவரது கைப்பேசியில் இருந்து விஏஓ திருமதி.இந்திரா அவர்களின் கைப்பேசிக்கு பேசி நான் வந்த விவரத்தை சொல்லி அவரது போனை என்னிடம் கொடுத்தார். நான் திருமதி.இந்திரா அவர்களிடம் பேசியபோது என்னை மதுரை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள தெற்கு தாலுகா அலுவலகத்திற்கு வர சொன்னார். உடனே நான் மதுரை தெற்கு தாலுகா அலுவலகத்திற்கு சென்று விசாரித்த போது திருமதி.இந்திரா அவர்கள் இன்னும் வரவில்லை, என்னை காத்திருக்க சொன்னார்கள். மதியம் சுமார் 02.45 மணிக்கு நான் விஏஓ திருமதி.இந்திரா அவர்களுக்கு போன் செய்து மேடம் தெற்கு தாலுகா அலுவலகத்திற்கு நான் வந்து விட்டேன் என்று கூறினேன். சிறிது நேரத்தில் விஏஓ திருமதி.இந்திரா அவர்கள் தெற்கு தாலுகா அலுவலகத்திற்குள் இருந்து வந்து என்னிடம் வாரிசு சான்றுக்காக விண்ணப்பித்த நகலை கேட்டு பார்த்து விட்டு நான் கேட்ட பணம் ரூ.18,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் அவரிடம் மேடம் நீங்கள் கேட்ட ரூ.18,000/-த்தை என்னால் ஏற்பாடு செய்ய முடியவில்லை, மிகவும் சிரமமாக உள்ளது பார்த்து சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் வாரிசு சான்றுக்கு மற்றவர்கள் எல்லாம் ரூ.50,000/- வரை வாங்குகிறார்கள். உங்களுக்காக நான் குறைத்து தான் சொல்லியிருக்கிறேன். எனவே ரூ.18,000/- நான் கேட்டபடி கொடுத்தால்தான் உங்களுக்கு வாரிசு சான்று கிடைக்கும். இல்லாவிட்டால் நீங்கள் அழைந்து கொண்டுதான் இருக்க வேண்டும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். மேலும் VAO கேட்ட பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு 01.05.2025-ந் தேதி மதியம் 03.00 மணிக்கு மேல் போன் செய்யுங்கள் எங்கு வரவேண்டும் என்று கூறுவதாக திருமதி.இந்திரா அவர்கள் சொன்னார். பின்னர் நான் அவர் சொன்னபடி 01.05.2025 ம் தேதி மாலை சுமார் 04.30 மணிக்கு திருமதி.இந்திரா அவர்களிடம் போனில் பேசி மொத்த பணம் ரூ.18,000/- இரவு தான் ரெடியாகும் என்று கூறினேன். அதற்கு திருமதி.இந்திரா அவர்கள் பணத்தை ரெடி பண்ணிவிட்டு 02.05.2025 ஆம் தேதி காலையில் போன் செய்துவிட்டு மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள தெற்கு தாலுகா அலுவலகத்திற்கு வந்து தன்னை சந்தித்து, தான் கேட்ட பணம்

ரூ.18,000/- த்தை கொடுக்க வேண்டும் என்று கூறினார். எனக்கு வாரிசு சான்று வழங்க பரிந்துரை செய்து கிடைக்க ஏற்பாடு செய்து தர விராதனூர் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.இந்திரா அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே எனது மாமியார், கொழுந்தன் மற்றும் கொழுந்தனின் மனைவி ஆகியோரிடமும் விஏஒ திருமதி.இந்திரா பணம் கேட்ட விவரத்தை கூறினேன். அவர்களும் வருத்தப்பட்டார்கள். நாங்கள் அனைவரும் மதுரை இலஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க முடிவு செய்தோம். எனவே எனது மனுவின்மீது நடவடிக்கை எடுத்து வாரிசு சான்று வழங்க பரிந்துரை செய்து கிடைக்க ஏற்பாடு செய்து தர என்னிடம் ரூ.18,000/- லஞ்சம் கேட்கும் விராதனூர் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.இந்திரா அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன். இத்துடன் எனது பெயரிலும் எனது மகன்கள் பெயரிலும் எனது கணவர் பெயரிலும் எனது மாமியார் பெயரிலும் உள்ள ஆதார் அட்டையின் நகல்கள் எனது கணவர் கணேசன் மற்றும் எனது மாமனார் ராமராஜ் ஆகியோர்களின் இறப்பு சான்று நகல்கள் மற்றும் 23.04.2025-ந் தேதி வாரிசு சான்று கேட்டு விண்ணப்பித்த விண்ணப்ப எண் TN-7202504231601-ன் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும் விராதனூர் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.இந்திரா அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.18,000/-த்தையும் கொண்டு வந்துள்ளேன். அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன். இப்படிக்கு (ஒ-ம்) **XXXXXX** (G.Murugeswari) 02.05.2025.

Sir, Received the typed complaint today on (02/05/2025) at 08.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Directorate of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 06/2025, u/s. 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.00

hrs and took up investigation. Sd./-XXXXXX (K.KUMARAGURU) 2/5/2025, **Inspector of Police, V&AC, Madurai.**

Original FIR along with original typed complaint of Tmt.G.Murugeswari, W/o. Ganesan (Late), No. 14-4-159, Royal Garden, Sholavandhan, Vadipatti Taluk, Madurai District along with photo copies of Aadhar Card of Tmt.Murugeswari, Tr.Karthick, Tr.Kannan, Ganesan (Late) and Tmt.Valarmathi, Death certificate of Ganesan and Ramaraj, Legal Heir Certificate application No. TN-7202504231601, dt.23.04.2025 **are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.**

2/5/2025.

(K.KUMARAGURU)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.